Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 30.12.2011

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 30.12.2011 | 118 | பொருள் எண்: 1<br>காயல்பட்டணம் நகராட்சி ஈப்பு வாகனம் TN69U 9148 பராமரிப்பு பணி செய்ய வேண்டும் என்ற வாகன ஒட்டுநர் அவர்களின் வேண்டுகோளின்படி நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்கியதன் அடிப்படையில் மேற்படி வாகனத்தை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை மூலம் பராமரிப்பு பணிகள் செய்ய நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>(1) நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(2) பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி ஈப்பு வாகனத்தில் பராமரிப்பு பணிகள் செயததையும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று அதற்குரிய பட்டியல் தொகை ரூ.19386/- வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | பொருள் எண் 1 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டது |
| | 119 | பொருள் எண்: 2<br>காயல்பட்டணம் நகராட்சி 18-வது வார்டு உறுப்பினர் திரு.இ.எம்.சாமி அவர்களின் கோரிக்கைகள்.<br>(1) மஹல்ராநகர் புதிய குடியிருப்புகளுக்கு சாலை அமைத்தல்.<br>(2) முத்தாரம்மன்கோவில் தெருவில் தொருமத்தியில் உள்ள அபாயகராமான அத்திமரத்தின் கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவும்.<br>(3) அபாயகரமாக உடைந்திருக்கும் SSXII S1, SSXII S2, SSXII Transformer Post, SS19 S3 1 ஆகிய மின்சாரகம்பங்களை மாற்ற நடவடிக்கை எடுத்தல்.<br>(4) புதிய குடியிருப்புகளில் மின்கம்பம் ஊன்றி விளக்கு போடுதல்.<br>(1) மஹல்ரா நகர் கடைசியில் ஒன்று.<br>(2) குலாம் சாகிபு தம்பி தோட்டத்தில் இரண்டு.<br>(3) கோமான் புதூர் - ஒன்று. | பொருள் எண் 2-ல் அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | (5) புதிய லைட் பிட்டிங் மாட்ட வேண்டிய இடம்<br>(1) குளம் சாகிபு தம்பி தோட்டம் - 3 குழல் விளக்குகள்.<br>(2) சேதுராஜா தெரு - சோடியம் விளக்கு ஒன்று.<br>(3) முத்தாரம்மன் கோவில் தெரு - ஒரு சோடியம் விளக்கு மற்றும் ஒரு குழல் விளக்கு.<br>(6) குலாம்சாகிபு தம்பி தோட்டம் புதிய குடியிருப்புகளில் சாலை அமைத்தல்.<br>(7) அனைத்து தெரு விளக்கு ஸ்விட்ச் பெட்டிகளை மாற்றுதல்.<br>அலுவலக குறிப்பு:-<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்திடவும், தெருவிளக்குகளை துரிதமாக அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 120 | பொருள் எண்: 3<br>efuh£Á ã®thf« kw¦W« FoÚ® tH§¦FJiw murhiz v© 201 ehs¦ 30.10.1998-d¦go xU Kiwik ty¦Ye® (System Analysis) 7 k©ly Ïa¡Feuf¤Âw¦F VG v©z« Â£l mik¥ghs® (Programmer) 103 efuh£Áf S¡F 103 v©z« cjé Â£l mik¥gs® (Assistant Programmer) kw¦W« 59 v©z« òs¦ë égu F¿¥ghs® (Data Entry Operator)g â æl§¦fs¦njhw¦Wé¡f¥£lJ.<br>efuh£Á ã®thf« kw¦W« FoÚ® tH§¦FJiw murhiz v© 57 ehs¦ 30.04.2007-d¦go _d¦wh« ãiy efuh£Áf S¡F 50 v©z« òs¦ë égu F¿¥ghs® (Data Entry Operator) gâæl§¦fS« efuh£Á ã®tf« kw¦W« Foã® tH§¦F Jiw murhiz v© 86 ehs¦ 18.06.2007-d¦go 7 k©ly Ïa¡Feuf¤Âw¦F 8 v©z« òs¦ë égu F¿¥ghs® (Data Entry Operator) gâæl§¦fS« njhw¦Wé¡f¥g£lJ.<br>nkw¦f©l gâæl§¦fëy¦ gâak®¤Âa gâahs®fS¡F jäH¦ehL efuh£Á jfty¦ bjhêy¦ E£g gâ éÂfs¦ 2010 vd éÂKiw tF¤J brd¦id efuh£Á ã®thf Miza® mt®fëd¦ foj v© 5163/2003/IT-1 ehs¦ 24.10.2010-d¦go muÁd¦ mDkÂ nfhçajw¦F muR foj v© 16288/ME-1 2008-14 ehs¦ 15.11.2011-y¦ efuh£Áfëy¦ kd¦w mDkÂ bgw¦W mD¥Ã it¡fÎ« kw¦W« Ïy¦yhj g£r¤Ây¦ njitahd elto¡if vL¡fÎ« bjçé¤Js¦sjhf bjçé¤J nkw¦go gâæl§¦fS¡F njitahd kd¦w mDkÂ bgw¦W mD¥Ã it¡f m¿ÎW¤Â tu¥bgw¦w | பொருள் எண் 3-க்கு அனுமதி வழங்கப்பட்டது |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | brd¦id efuh£Á ã®thf Miza® mt®fëd¦ foj« v© 5163/2003/II-I ehs¦ 22.11.2011- I kd¦w¤Âd¦gh®it¡F«gÂéw¦F« it¡f¥gL»wJ.<br>mYtyf F¿¥ò:<br>mDkÂ¡fyh«. | |
| | 121 | பொருள் எண்:- 4<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதி 11-வது வார்டு பெரிய நெசவுத் தெரு செய்து காலனி பகுதி பெண்களும், பள்ளி குழந்தைகளும் போகின்ற பொது பாதையாகும் இந்த பாதையில் சிமெண்ட் ரோடு அமைத்து தறுமாறும், பெரிய நெசவுத் தெரு பகுதி குண்டும் குழியுமாக உள்ள தார் சாலையினை பொது நிதியிலிருந்து அமைத்து தறுமாறும் கேட்டுக் கொண்ட நகர்மன்ற துணைத் தலைவர் திரு.SM.முகைதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு:-<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் அமைத்திட மன்றம் அனுமதிக்கலாம். | பொருள் எண் 4-ல் குறிப்பிட்டுள்ள சிமெண்ட் ரோடு குறித்து ஆய்வு செய்த பிறகு மற்ற பணிகளை முன்னுரிமை அடிப்படையில் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது |
| | 122 | பொருள் எண்:- 5<br>காயல்பட்டணம் நகராட்சியின் 11-வது வார்டுக்குட்பட்ட கே.டி.எம். தெரு இடையில் உள்ள நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பகுதியில் குப்பைகள் அதிகமாக உள்ளது. இதனால் நோய் பரவி வருகிறது. அதலால் நகராட்சி மூலம் மூலமாக குப்பைகளை அகற்றி நோய்பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்ட நகர்மன்ற துணைத் தலைவர் திரு.SM.முகைதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு:-<br>அவசர அவசியம் கருதி குப்பைகளை அகற்றிட மன்றம் அங்கீகரிக்கலாம். | பொருள் எண் 5-ஐ மன்றம் அங்கீகரிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | 123 | பொருள் எண்:- 6 | பொருள் எண் 6 மன்றம் |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு வருடந்திர பராமரிப்பு கொடுப்பதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவகளின் ந.க.எண்:-186/2010/சி2 நாள்:-18.11.2011-ல் தெரிவிக்கப்பட்டதன்படி கணிணிகள், சர்வர் மற்றும் பிரிண்டர்களுக்கு வருடாந்திர பராமரிப்பு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதி வழங்கப்பட்டது |
| | 124 | பொருள் எண்:- 7<br>காயல்பட்டணம் நகராட்சி மூன்றாம் நிலையிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியியாக (தரம்) நிலை உயர்த்தப்பட்டுள்ளதால் உள்ளுர் திட்டக் குழும பகுதியாக அறிவிப்பு செய்து முழுமைத்திட்டம் தயார் செய்து அரசுக்கு அனுப்ப இந்நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க கேட்டு வரப்பெற்ற நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்:-2334/2005/திலிம3 நாள்:-13.12.2011 மன்றத்தின் பார்வைக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>அனுமதிக்கலாம். | பொருள் எண் 7 மன்றம் அனுமதி வழங்கப்பட்டது |
| | 125 | பொருள் எண்:-8<br>காயல்பட்டணம் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளுர் வளர்ச்சித் திட்டம் 2011-12-ன் கீழ் தூத்துக்குடி திருச்செந்துார் நெடுஞ்சாலையில் தாயிம் பள்ளி அருகில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் வேலைக்கு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரபட்டதில் முதல் ஆறு அழைப்புகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. தற்போது ஏழாவது ஒப்பந்தப்புள்ளி அழைப்பு 20.12.2011 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | பொருள் எண் 8<br>நகர்மன்றம் அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>மேலும் ஒரு வழிபாதை முடிவு செய்யப்பட்ட பிறகு மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்க தீர்மானிக்கப்பட்டது |

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டு ரேட்டுக்கு |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.தலவாணிமுத்து, பூந்தோட்டம் | மதிப்பீட்டு ரேட்டை விட 4.93 சதவீதம் கூடுதல் |
| 2 | திருமதி.ஆர்.தங்கப்பூஅம்மாள், | மதிப்பீட்டு ரேட்டை விட 5.29 |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>காயல்பட்டணம்</td><td>சதவீதம் கூடுதல்</td></tr>
</table>
வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தலவாணிமுத்து, பூந்தோட்டம் என்பவர் குறைவான ரேட் கோரியுள்ளபடியினால் (4.93% மதிப்பீட்டு ரேட்டைவிட கூடுதல்) அவரது ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:-<br>
நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>126</td>
<td>
பொருள் எண்:- 9<br>
நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:-47923/211/இ3 நாள்:-24.11.2011.<br>
பார்வையில் கண்ட கடிதத்தில் சிறப்புத் திட்டம் IUDM 2011-12-ன் கீழ் நிதி ஒதுக்கீடு விரிவான திட்ட மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. அதன்படி காயல்பட்டணம் நகராட்சியில் இந்த சிறப்புத் திட்டம் IUDM 2011-12-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>டம்பர் பிளேசர் வாகனம் 1 எண்ணம் வாங்குதல்</td><td>ரூ.850000.00</td></tr>
<tr><td>2.</td><td>டம்பர் பிளேசர் தொட்டி 45 எண்ணம் வாங்குதல்</td><td>ரூ.2475000.00</td></tr>
<tr><td>3.</td><td>டம்பர் பிளேசர் வாகனம் பொருத்த இகாமட் வாகனம் 1 எண்ணம் வாங்குதல்</td><td>ரூ.967000.00</td></tr>
<tr><td>4.</td><td>புஷ்காட் 48 எண்ணம் வாங்குதல்</td><td>ரூ.708000.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>ரூ.50,00,000.00</td></tr>
</table>
மேற்கண்ட திட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:-<br>
(1) மன்ற அனுமதி வழங்கலாம்.<br>
(2) திட்டத்தின் அவசர அவசியத்தை முன்னிட்ட நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று திட்ட கருத்துரு வழஙகியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td>பொருள் எண 9 க்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr>
<td></td>
<td>127</td>
<td>
பொருள் எண்:-10<br>
பார்வை:-<br>
(1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:-47109/2011/பி1 நாள்:-28.10.2011.<br>
(2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்:-7254/2008/அ4 நாள்:-10.11.2011.<br>
பார்வையில் கண்ட கடிதத்தில் நகராட்சி பகுதிகளில் திறந்த வெளியில் மனிதகழிவு கழிக்கும் நிலை அகற்றிட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி பகுதிகளில் கீழ்கண்ட இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது.<br>
1. அருணாசலபுரம்.<br>
2. ஓடக்கரை.<br>
3. உச்சினிமாகளியம்மன் கோவில் தெரு.<br>
4. வடக்குமுத்தாரம்மன் கோவில் தெரு.<br>
5. மங்களாவாடி.<br>
6. கீழ்லெட்சுமிபுரம்.<br>
வரிசை எண்:-4 மற்றும் 5-ல் உள்ள இடங்களில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கழிப்பறை பயன்படுத்த முடியாத அளவில் சேதமடைந்துள்ளது. எனவே அதில் புதிய கழிப்பறை கட்டவும் வரிசை எண்:-6-ல் உள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ள கழிப்பறை சிறிதளவில் மட்டுமே சேதமடைந்துள்ளதால் அதனை மேம்பாடு செய்யவும் மற்றவற்றில் வரிசை எண்:-1, 2 மற்றும் 3-ல் உள்ள இடங்களில் கழிப்பறை வசதி எதுவும் இல்லையென்பதால் அந்த இடங்களில் புதிய கழிப்பறை கட்டவும் கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>தொகை (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>அருணாசலபுரத்தில் புதிய கழிப்பறை கட்டுதல்</td><td>ரூ. 7.20</td></tr>
<tr><td>2.</td><td>ஓடக்கரையில் புதிய கழிப்பறை கட்டுதல்</td><td>ரூ. 7.20</td></tr>
<tr><td>3.</td><td>உச்சினிமாகாளியம்மன் கோவில் தெருவில் புதிய கழிப்பறை கட்டுதல்</td><td>ரூ. 7.20</td></tr>
<tr><td>4.</td><td>வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் புதிய கழிப்பறை கட்டுதல்</td><td>ரூ. 7.20</td></tr>
<tr><td>5.</td><td>மங்களாவாடியில் புதிய கழிப்பறை கட்டுதல்</td><td>ரூ. 7.20</td></tr>
</table>
</td>
<td>பொருள் எண் 10-ல் மன்றம் அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | |
|---|---|---|
| 6. | கீழ்லெட்சுமிபுரத்தில் ஏற்கனவே உள்ள கழிப்பறை மேம்பாடு செய்தல் | ரூ. 7.20 |

மேற்கண்ட திறந்தவெளியில் மலம் கழிக்கும் இடங்களில் கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு கழிப்பறை கட்ட கீழ்க்கண்டவாறு பயனாளிகள் கண்டறிப்பட்டு கழிப்பறை கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | இடத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | அருணாச்சலபுரம் | 45 | 4.50 |
| 2. | உச்சினிமாகாளியம்மன் கோவில் தெரு | 48 | 4.80 |
| 3. | ஓடக்கரை | 66 | 6.60 |
| 4. | முத்தாரம்மன்கோவில் தெரு | 46 | 4.60 |
| 5. | மங்களாவாடி | 16 | 1.60 |
| 6. | லெட்சுமிபுரம் | 48 | 4.80 |
| | மொத்தம் | 269 | 26.90 |

ஏற்கனவே மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திட்ட கருத்துரு ரூ.64.90 இலட்சத்திற்கு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | 128 | பொருள் எண்:-11 | பொருள் எண் 11 |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | காயல்பட்டணம் நகராட்சி 11-வது வார்டுக்குட்ட பெரிய நெசவுத் தெருவில் தெற்குப் பகுதியில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு பதிக்கப்பட்டது. தற்பொழுது பதிக்கப்பட்ட குடிநீர் விநியோகக்குழாய் 1.05 மீட்டர் ஆழத்தில் பதிக்கப்பட்டது. ஆனால் எற்கனவே பெரிய நெசவுத் தெருவில் பதிக்கபட்டுள்ள குடிநீர் விநியோகக்குழாய் (ஏ.சி.குழாய்) சுமார் 2.00 மீட்டர் ஆழத்தில் உள்ளர். புதியதாக போடப்பட்ட குடிநீர் விநியோகக்கு குழாய் பழைய ஏற்கவே உள்ள ஏ.சி.குழாயில் இணைப்பு செய்யும் பொழுது புதிய குழாயக்கும் பழைய குழாய்க்கும் 1.00 மீட்டர் வித்தியாசம் இருப்பதால் புதியதாக போடப்பட்ட குடிநீர் குழாயில் தண்ணீர் சரிவர வராமல் அதில் இணைப்பு பெற்றுள்ள வீட்டின் உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே தற்பொழுது புதியதாக போடப்பட்ட பி.வி.சி. குடிநீர் விநியோகக் குழாய்களை வழைய ஏ.சி. குழாய் மட்டத்திற்கு (சுமார் 2.00 மீட்டர் ஆழத்தில்) பதித்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.<br><br>அலுவலக குறிப்பு:-<br>குடிநீர் பணி ஆதலால் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து செய்திட மன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு மன்றம் அனுமதி வழஙக்ப்பட்டது |
| | 129 | பொருள் எண:-12<br>காயல்பட்டணம் நகராட்சியின் 2010-11-ம் ஆண்டுக்குரிய நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | பொருள் எண் 12 மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| | 130 | பொருள் எண:-13<br>காயல்பட்டணம் நகராட்சியில் 7-வது வார்டு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள்.<br><br>1. சுனாமி நகரில் உள்ள மக்களுக்கு இரவில் மீன் பிடித்து வருவதற்கு கடற்கரையில் மிகவும் இருளால இருப்பதால் அந்த பகுதி சுனாமிநகர் மக்களுக்கு கடற்கரையில் புதிதாக 10 மின்கம்பங்கள் அமைத்து விளக்கு அமைத்தல்.<br>2. சிங்கித்துறை மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் மேற்படி தொட்டியினை சுற்றி சுற்றுச்சுவர் கட்டுதல். | பொருள் எண் 13-ல வரிசை எண் 2,4,5,6 ஆகியவை ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது வரிசை எண் 1,3,7 ஆகியவை ஆய்வு செய்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | 3. சிங்கித்துரை மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு தென்புறமாக உள்ள மக்கள் சாலை வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள் எனவே மேற்படி சாலையினை புதிதாக அமைத்து ஈக்கியப்பா தைக்கா சாலையுடன் இணைத்தல்.<br>4. கீழநெயினார் தெருவில் உள்ள **SSXIV W** 16 மின்சாரகம்பம் பழுதடைந்துள்ளதால் மேற்படி மின்சார கம்பத்தினை மாற்றுதல்.<br>5. ஈக்கியப்பா தைக்கா மண் சாலைகளில் உள்ள மின்கப்பங்களில் மின்விளக்கு இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகுந்த சிரத்தைக்குள்ளாகிறார்கள் எனவே மேற்படி தெருவில் உள்ள மின்கம்பங்களுக்கு புதிதாக மின்கம்பங்கள் அமைத்தல்.<br>6. சிங்கித்துறை 44-ம் எண் வீட்டின் அருகே உள்ள மின்கம்பத்திலிருந்து கடற்கரை முகைதீன் பள்ளி வாசலுக்கு செல்லும் மின் வயர் மேற்படி வீட்டின் மேல் உரசும் ஆபத்தான சூழ்நிலையில் உள்ளது எனவே மேற்படி மின்கம்பத்தினை மாற்றியமைத்தல்.<br>7. சிங்கித்துறை வடக்கு பகுதியிலிருந்து காயல்பட்டணம் கடற்கரை பூங்கா வரையில் கடற்கரை ஓரங்களில் உள்ள முற்செடி, குப்பைகளை அகற்றி சுத்தம் செய்து தறுமாறு கேட்டுக் கொள்ள 7-வது வார்டு உறுப்பினர் திரு.ஜே.அந்தோணி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும்.<br>அலுவலக குறிப்பு:-<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்திடவும், குடிநீர் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து செய்யவும், தெருவிளக்குகளை துரிதமாக அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 131 | பொருள் எண:-14<br>காயல்பட்டணம் நகராட்சி 17-வது வார்டுக்குட்பட்ட பகுதியன குத்துக்கல் தெருவில் மழை நீர் அதிகம் தங்குவதால், பொது மக்களுக்கும் மிகவும் இடையூராக இருப்பதால் புதிய தார்சாலை அமைக்கவும், காட்டுத் தைக்கா தெரு அன்னை ஸ்டோர் முதல் மெய்தீன் பள்ளி வரையுள்ள சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அதில் தார்ச்சாலை அமைத்திடவும், காட்டுத் தைக்கா தெரு உள் பகுதியில் 2 மின்கம்பங்களும், மொகுதூம் பள்ளி மையவாடியில் அமைக்கப்பட்டுள் தொட்டியிலிருந்து தண்ணீர் விநியோகம் செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.<br>அலுவலக குறிப்பு:-<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்திடவும், குடிநீர் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து செய்யவும், தெருவிளக்குகளை துரிதமாக அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். | பொருள் எண் 14 -ல் அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | 132 | பொருள் எண:-15<br>காயல்பட்டணம் நகராட்சி அலவலகத்தில் முன்பக்கம் அமைந்துள்ள நுழைவுவாயில் பகுதியில் மரத்தில் உள்ள பறவைகள் எச்சம் போட்டு பொதுசுகாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. மேலும் அதனுடைய எச்சம் அலுவலகத்திற்க வரும் பொதுமக்கள் மீதும் படுவதால் அதன் முன்பகுதியில் பைபர் சீட்டால் ஆன மேல்கூறை அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம் அனுமதிக்கலாம். | பொருள் எண் 15-ல் நகராட்சி அலுவலக கட்டிடம் இடித்துவிட்டு புதிதாக கட்டுவதற்கு (பகுதி-2 திட்டத்தின் கீழ்) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அனுப்புவதால் இந்த அலுவலக குறிப்பை தற்போதைய சூழல் கருதி மன்றம் அனுமதிக்கவில்லை |
| | 133 | பொருள் எண:-16<br>(1) நகர்மன்றத்தின் மாதந்திர கூட்டம் மற்றும் சிறப்புக் கூட்டம் உள்ளுர் மற்றும் வெளியூர் மற்றம் வெளிநாடுகளில் வசிக்கும் காயலர்கள் காண்பதற்கு வசதியக நமதூரின் செய்திகளை வெளியிட்டு வரும் காயல்டுடே இணையதளத்தில் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு அனுமுதி வழங்குமாறு அதற்கு தேவையான இண்டர்நெட் வசதி செய்து தருதல்.<br>(2) சொத்து மற்றும் இதர வரியினங்களை ஆன்லைன் மூலம் செலுத்த ஏற்பாடு செய்தல்.<br>(3) ஆதரவின்றி ரோட்டில் சுற்றித்திரியும் ஆடு, மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.<br>(4)நகர்மன்றத்தின் ஆண், பெண் உறுப்பினர்கள் அலவலக நடவடிக்கைளில் அவர்களே நேரடியாக செயல்படும்படியும், அவர்களது பிரதிநிதியாக நகராட்சிக்குள் வருபவர்கள் அலுவலக வேலைகளில் ஈடுபட தடைவிதிக்கவும்.<br>(5) காயல்பட்டணம் நகராட்சி கடையக்குடி மற்றும் கற்புடையார் பள்ளி வட்டம் பகுதியிலிருந்து வெளியூர்களுக்கு முன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் மீன்களை எடுத்துச் செல்பவர்களுக்கு வரி விதிப்பு செய்யவும். | பொருள் எண் 16-ல் வரிசை எண் (1) (2) பரிசீலித்து முடிவு செய்ய (அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு) தீர்மானிக்கப்பட்டது வரிசை எண் (3) ல் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக ரோட்டில் சுற்றி திரியும் மாடுகளை பிடித்து அதன் சொந்தகாரர்களுக்கு அபராதம் விதிக்க |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | (6) நகராட்சி பணியாளர்கள் தங்களின் வருகையை பதிவு செய்ய பயோமெட்ரிக்(கைரேகை) கருவியை நகராட்சி அலுவலகத்தில் பொருத்தும்படியும்.<br>(7) நமதூரில் எந்தெந்த நாட்களில் எத்தனை மணி நேரம் எவ்வளவு இணைப்புகளுக்கு குடிதண்ணீர் திறந்து விடப்படுகின்றது. எத்தனை மணி நேரம் குடிநீர் தேக்க தொட்டிகளில் தண்ணீர் சேகரிக்கப்படுகிகது. ஒரு நாளைக்கு எவ்வளவு முறை குடிநீர் தேக்க தொட்டியில் தண்ணீர் ஏற்றப்படுகிறது. குடிநீர் திற்ந்துவிடும் பணிக்காக மட்டும் எத்தனை பணியாளர்கள் உள்ளனர் என்ற விபரத்தையுமத் அவர்குள் எந்தெந்த நாட்களில் எந்த குடிநீர் தேக்க தொட்டியல் எத்தனை மணி நேரம் குடிநீர் ஏற்றுகளிாறர்கள் என்ற விபரத்தையும் எவ்வளவு நேரம் எவ்வளவு இணைப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்கிறார்கள் என்ற விபரத்தையும் அறிய நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொண்ட 5-வது வார்டு உறுப்பினர் திரு.ஜஹாங்கீர் அவர்களின் கடிதம் மனறத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>அலுவலக குறிப்பு:-<br>(1) மேற்படி நகர்மன்ற கூட்டங்ளை நேரடியக இணைத்தில் வெளியிடுதல் தொடர்பாக வசதிகள் செய்து கொடுக்க ஏற்படும் செலவினங்கள் தணிக்கைத் தடைக்கு உட்படுத்தப்படும் என்பதாலும் மேலும் வருங்காலங்களில் காயல்டுடே இணையதளம் போன்று வேறு சில அமைப்புகள் அனுமதி கோறும்பட்சத்தில் அதற்கான வசதிகள் ஏதும் செய்துதர இயலாதபட்சத்தில் பிரச்சினைகள் ஏதும் உருவாகலாம் ஆகிய விசயங்களை கருத்தில் கொண்டு மன்றம் பரிசீலிக்கலாம்.<br>(2) வரியினங்கள் ஆன்லைனில் செலுத்துதல் தொடர்பாக நகராட்சி தகவல் தொழில்நுட்ப துறைக்கு பரிந்துரை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.<br>(3) ரோட்டில் ஆதரவின்றி சுற்றி திரியும் ஆடு மாடுகளை பிடித்து பவுண்டரி அமைத்து அபராதம் விதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.<br>(4) அலுவலகத்திற்கு வரும் நபர்களை பொதுமக்களாகவே கருத இயலும் உறுப்பினர்களின் பிரதிநிதியக கருத இயலாது மேற்படி நபர்களுக்கு தடை விதிக்கும்பட்சத்தில் ஏற்படும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு மன்றம் பரிசீலிக்கலாம்.<br>வரிசை எண் 5, 6 மற்றும் 7 ஆகியவற்றினை மற்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம். | தீர்மானிக்கப்பட்டது.<br>வரிசை எண் (4) ல் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் அலுவலகத்திற்கு வருகை தரும்போது அவர்களும் பொதுமக்களாகவே கருதப்படுவார்கள் பெண் உறுப்பினர்களும் கீழ்குறிப்பிட்ட அலுவலகபணிகளில் மட்டும் அவர்களுடைய பிரதிநிதிகள் செயல்படுவதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.<br>1. டியூப்லைட் எடுத்து செல்லுதல்<br>2 J.C.B.வேலை செய்தல்<br>3. ரோடு பணி மேற்பார்வை<br>4. தண்ணீர் குழாய் உடைப்பு போன்ற அலுவலக வெளி வேலைகள் மட்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 134 | பொருள் எண்:-17 | பொருள் எண் 17 ஐ |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார வாகனம் எண்:-TN69 S0146 வண்டியில் கிளட்ச் பழுது பார்க்கும் பணி அய்யானர் ஆட்டோ மொபைல்ஸ், தூத்துக்குடி நிறுவனத்தின் மூலம் அவசர அவசியம் கருதி பழுது பார்க்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.13495/- வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>(1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்படி பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | மன்றம் அங்கீகரிக்கிறது |
| | 135 | பொருள் எண்:-18<br>காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார வாகனம் எண்:-TN69 U692 எப்.சி. எடுக்க பணி செய்யும் பொருட்டு பழுது நீக்கம் செய்திட அய்யனார் ஆட்டோ மொபைல்ஸ், தூத்துக்குடி நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் தற்போது பழுது பார்க்கும் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு பில் தொகையான ரூ.87800/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் பில் தொகை ரூ.87800/- சம்பந்தப்பட்ட நிறுவத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 18 மன்றம் அனுமதி வழங்கியது |
| | 136 | பொருள் எண்:-19<br>(1) வாழ்வாதாரமன குடிநீர் கிடைப்பதிலும், கிடைத்ததை பகிர்வதிலும் பேணுவதிலும் மகச்சிறந்த நல்லமுறையில் நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எமது ரெட் ஸ்டார் வளாக நீர்த்தேக்க தொட்டியை 16.11.11 மற்றும் 26.12.2011லும் சுத்தம் செய்தவிடத்தில் அவசியம் கவனிக்கப்பட வேண்டியது. குடிநீர் தொட்டியில் மேல் மூடி இல்லாதிருப்பது இதனால் மழை நீரும், விஷஜந்துகள் விழுவதால் தண்ணீர் அசுத்தமாகி விடுவது தண்ணீரில் துர்நாற்றமும், கசப்புத்தன்டையும் இருப்பது 1785-ல் கட்டப்பட்ட தொட்டியில் இதுவரை வயிட்வாஷ் பண்ணப்படாதல் இருப்பது தொட்டி வளாகத்தை சுற்றி புதர்மண்டி கிடப்பது. சுற்றியுள்ள அனைத்து வால்வுத் தொட்டிகளும் மூடப்படாமல் பழுதடைந்து தண்ணீர் ஒழுகும் நிலையில் இருப்பது. சுற்றுச் சுவர் பழுதடைந்திருப்பது நமது ஊரில் குடிநீர பில்டர்(வடிகட்டதல்) இல்லை என்பது. எனவே உடனே இத்தொட்டியை முழுதாக சீர்செய்ய வேண்டும். இதுபோல் நம் ஊரில் உள்ள அனைத்து தொட்டிகளையும் பராமரிப்பு செய்ய வேண்டும். குடிநீர் தொட்டி வளாகங்களை பராமரிக்க தனியார் வசம் ஒப்படைக்க சாதக பாதகங்களை பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும்.<br>(2) எமது தெருவில் இரு மின்கம்பங்களை சுற்று அடிப்பகுதி இடிந்து துருஏறி இருப்பதை உடனே சரி | பொருள் எண் 19 வரிசை எண் 1-ல் அனைத்து விஷயங்களும் உடடியாக நடவடிக்கை எடுத்து செய்வதற்கும் குடிநீர் தொட்டி வளாகங்களை தனியார் வசம் ஒப்படைக்க சாதக பாதகங்களை பரிசீலித்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண் 2,3,4,5,6,7,8 உள்ள விஷயங்களை நடைமுறைபடுத்த மன்றம் |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | செய்ய வேண்டும். மின் விளக்குகள் அடிக்கடி பழுது ஏற்படுவதை சரி செய்ய வேண்டி உள்ளது. இப்பிரச்சிசையில் மின்வாரியத்திற்கும், நகராட்சிக்கும் இடையே உள்ள ஒத்துழையாமை நிலையை முடிவுக்க கொண்டுவர நல்ல செயல்திட்டத்தை ஏற்படுத்துதல் அவசியமாகிறது. புதிதாக உள்ள மின்விளக்குகள் பொறுத்தப்படாத கம்பங்களில் மின்விளக்குகளை பொறுத்த வேண்டும்.<br>(3) அன்றாடம் குப்பை நீக்க வண்டிகளை முறைப்படி அனுப்ப வசதியாக புதிய வண்டிகளுகம் பணியாளர்களும் ஏற்படுத்துவது. பொது நடைபாதைகள் பள்ளி செல்லும் வழிகளில் புகுப்பையை கொட்டி சீர்கேட்டை ஏற்படுத்தும் சமூக விரோதச் செயலை செய்வோரை கண்காணித்து முறைப்படி எச்சரித்து மீண்டும் இந்நிலை ஏற்படாதிருக்க ஆவண செய்ய வேண்டும். குடிநீர் தொட்டிகள் உள்ள வளாகத்தை சுத்தம் செய்து நல்லமரக்கன்றுகளை நட்டி பராமரிக்கலாம்.<br>(4) இதுவரை என்னிடத்தில் தங்களது வறிய நிலையைக் கூறி வறுமைக் கோட்டின் கீழ் கணக்கெடுப்பை எடுக்குமாறு 25 பேர் மனுச் செய்துள்ளனர் அவர்களின் பட்டியலை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே தயைகூர்ந்து இக்கணக்கெடுப்பை துரிதப்படுத்தி அம்மக்களுக்கான உணவு, உடை, உறைவிட அத்தியாவசிய தேவைகளை அரசிடம் பெற்றுத்தர ஆவண செய்ய வேண்டும்.<br>(5) புதிய குடுமப அட்டை, வாக்காளர் அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் கிடைக்கவும், பழைய குடும்ம அட்டைகள், அடையாள அட்டைகள், சான்றிதழ்களில் உள்ள பெயர் விலாசம், புகைப்படம் மற்றும் குளறுபடிகளை திருத்தவும் மாதம் தோறும் முகாம்களை நடத்தி சீர் செய்ய வேண்டுகிறேன்.<br>(6) பிளாஸ்டிக் ஒழிப்பை முற்றிவும் கடை பிடிப்பதோடு குப்பைகளை மக்கிய குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்து அளிக்க பொது மக்களுக்கு உத்திரவிட வேண்டும். மக்கும் குப்பையை வீட்டிலேயே உரமாக்கும் திட்டத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தி செயல்படுத்தலாம். குப்பையை கொட்டி உரமாக்க தனியார் இடம் தரும் பட்சத்தில் அதை உரமாக்கும் திட்டத்தை நகராட்சி செயல்படுத்தினால் மிகவும் நன்மையாக அமையும்.<br>(7) அப்பா பள்ளித் தெரு, மரைக்கார் பள்ளித் தெரு சாலைகளும் கிழமேலாக இருபுறமும் உள்ள சாலைகளும் முறைப்படி தோண்டப்பட்டு சமமாக சீர் செய்யப்பட்ட புதியதார் சாலை அமைக்க போர்க்கால அடிப்படையில் நமது பொது நிதியில் இருந்து சீர் செய்து தர வேண்டுகிறேன்.<br>(8) ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி நூலகம் அமைக்கவும் கேட்டுக் கொண்ட 9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ.ஹைறிய்யா அவர்களின் கடிதம் மன்றத்தின்ப பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்திடவும், குடிநீர் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து செய்யவும், தெருவிளக்குகளை துரிதமாக அமைத்திடவும் | அனுமதி வழங்குகிறது |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

<table>
<tr><td></td><td></td><td>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>137</td><td>பொருள் எண்:-20<br><br>காயல்பட்டணம் நகராட்சி 14-வது வார்டு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள்.<br><br>(1) சாலை வசதி<br>(2) 14-வது வார்டு புதிய தெரு விளக்கு.<br>(3) முறையாக குப்பை அகற்ற வேண்டுதல்ள<br>(4) வாரம் 2 முறை குடிநீர் வழங்குதல்.<br>(5) வால்வு குழாய் அடைப்பு மற்றும் தண்ணீர் திறந்து விடும் தொட்டி மூடுதல் மற்றும் சீரமைத்தல்.<br>(6) செக்ஸன் வால்வு அமைத்து தண்ணீர் முறையாக வழங்குதல் தெரு பைப்புகள் ஏற்பாடு செய்தல்.<br>(7) லெட்சுமிபுரம் மின்கம்பத்தை அகற்றி மாற்று இடத்தில் நடவேண்டும்.<br>(8) இடிந்த நிலையில் உள்ள கம்பத்தை அகற்றி புதிய மின்கம்பங்கள் அமைக்க மின்வாரியத்திற்கு ஆவண செய்ய வேண்டும்.<br>(9) தெருவிளக்கு குடிநீர் முழுமையாக கிடைக்க நகராட்சி ஊழியர்கள் முழு ஒத்துழைப்பு வேண்டுதல்.<br>(10) மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுப்பதை தடை செய்து மற்றும் மின்தடை செய்த நேரத்தில் தண்ணீர் திறந்து விட ஆவண செய்தல்.<br>(11) புதியதாக குடிநீர் இணைப்பு வழங்கும் பொழுது நகர்மன்ற உறுப்பினருக்கு முன்னறிவிப்பு கிடைக்க ஆவண செய்யவும் கேட்டுக் கொண்ட 14-வது வார்டு உறுப்பினர் திருமதி.பாக்கியஷீலா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்திடவும், குடிநீர் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து செய்யவும், தெருவிளக்குகளை துரிதமாக அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>பொருள் எண் 20 -ல் வரிசை எண் 10-ல் மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுப்பு என்பதை தடைசெய்வது என்பது அனைத்து உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாக ஒத்துழைப்பு தரும் பட்சத்தில் நடைமுறைபடுத்த முயலலாம் எனவும் மின்தடை செய்த நேரத்தில் தண்ணீர் திறந்து விடுவது என்பது சாத்தியமற்றது எனவும் தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண் 1,2,3,4,5,6,7,8,9,11 ஆகியவைகளில் உள்ள விஷயங்களில் அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>138</td><td>பொருள் எண்:-21<br>காயல்பட்டணம் நகராட்சி 11-வது வார்டு பெரிய நெசவுத் தெரு ஒரு வழிப்பாதை சம்பந்தமாக</td><td>பொருள் எண் 21 -ல் ஒருவழி பாதை என்பது</td></tr>
</table>

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | அந்த ஜமாத்தை சேர்ந்தவர்கள் முன்னாள் நிர்வாக அதிகாரி ஜனாப்.அ.மு.செய்யது முகம்மது அவர்கள் 17.09.1990 அன்று ஆணையில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தை (ஆணை ந.க.எண்:-1742/89) அமுல்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள் இந்த கோரிக்கையை வரும் நகராட்சி கூட்டத்தில் பரிசீலனை செய்து தீர்மானம் நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்ட நகர்மன்ற துணைத் தலைவர் திரு.SM.முகைதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | நம்முடைய காயல்பட்டணம் நகராட்சி பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று. ஒரு வழிபாதையை முடிவு செய்யும் பொறுப்பு மாவட்ட உயர்அதிகாரிகளின் கட்டுபாட்டுக்குள் உள்ளது ஆகையால் அவர்கள் எடுக்கும் முடிவிற்கு ஒத்துழைக்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது |
| | 139 | பொருள் எண்:-22<br>காயல்பட்டணம் நகராட்சி 16-வது வார்டு SA.சாமு சிகாப்தீன் ஹாஜி அவர்களின் கோரிக்கைகள்.<br>(1) காயல்பட்டணம் நகராட்சி 16-வது வார்டுக்குட்பட்ட தைக்கா தெரு மற்றும் புதுக்கடைத் தெருவின் சாலைகள் மிகவும் பழுதடைந்து குண்டும், குழியுமாக உள்ளது வாகனங்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. தைக்காவிற்கு முன்புறம் உள்ள கான்கிரட் சாலை உடைந்து மிகவும் பழுதடைந்து உள்ளது. மேற்படி தைக்காவில் கந்தூரி விழா நடைபெற உள்ளதால் இச்சாலையை உடனடியாக சரி செய்தும், மேற்படி தெருக்களின் சாலையை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து சரி செய்து தருதல்.<br>(2) காயல்பட்டணம் நகராட்சி 16-வது வார்டுக்குட்பட்ட புதுப்பள்ளி அருகில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி மக்கள் நடமாட்டத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இப்பகுதியில் உள்வாக புதிய சாலை அமைத்து மழைநீர் தேங்காவண்ணம் சாலையின் ஓரம் வடிநீர் வாறுகால் அமைத்தல்.<br>(3) காயல்பட்டணம் நகராட்சி 16-வது வார்டுக்குட்பட்ட மருத்தவர் தெரு, மேலப்பள்ளித் தெரு ஆகிய பகுதிகளில் புதிய சாலை அமைத்தல்.<br>(4) எனது வார்டிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை இரவு நேரங்களில் மிகவும் ஆபத்தாக உள்ளது. இதனால் கடந்த மாதங்களில் கூட ஒரு திருட்ட நடைபெற்றுள்ளது. ஆகவே தாங்கள் மேற்படி தெருவிளக்குகள் எரிவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல். | பொருள் எண் 22 -ல் வரிசை எண் (1)-ல் தைக்காவில் கந்தூரி விழா நடைபெறுவதால் தைக்கதெருவில் தைக்காவிற்கு முன்னுள்ள பழுதடைந்த சாலையை உடனடியாக போர்க்கால அடிப்படையில் சரி செய்து தர நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.<br>வரிசை எண் 2,3,4,5,6,7 ஆகியவைகளில் உள்ள விஷயங்களில் அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | (5) காயல்பட்டணம் நகராட்சி 16-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் வருகின்ற தண்ணீர் சாக்கடைநீர் கலந்து வருகின்றது மேலும் மேலப்பள்ளித் தெருவில் குடிநீர் குழாய் உடைந்து, வீடுகளுக்கு தண்ணீர் வருவதே கிடையாது அதனையும் சரி செய்யவும்.<br>(6) காயல்பட்டணம் நகராட்சி 16-வது வார்டுக்குட்பட்ட பகுதியான தைக்காத் தெருவில் சம்பு தொட்டி மூடி இல்லாமல் உள்ளது. அதில் கழிவு குப்பைகளை கொட்டி, குப்பை தொட்டிபோல் காட்சியளிக்கிறது. ஆகவே சம்பு தொட்டிற்கு மூடி அமைத்து சரி செய்து தருதல்.<br>(7) ஆஸ்பத்திரி தெருவில் உள்ள பொது குடிநீர் குழாய் சம்பு சீதலமடைந்து அப்பகுதியில் செல்லும் வாகனங்கள் அதில் விழுந்து விபத்து ஏற்படுகிறது. இதனை தடுக்க மேற்படி சம்பு தொட்டிக்கு மூடி அதைத்து தரும்படியும் கேட்டுக் கொண்ட 16-வது வார்டு உறுப்பினர் SA.சாமு சிகாப்தீன் ஹாஜி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்திடவும், குடிநீர் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து செய்யவும், தெருவிளக்குகளை துரிதமாக அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 140 | பொருள் எண்:-23<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்:-7254/2008/அ4 நாள்:-10.11.2011-ல் இந்நகராட்சி உட்பட்ட இடங்களில் திறந்தவெளி இடங்களில் கழிப்பிடம் கட்டுவது சம்மந்தமாக பிரேரனை அனுப்பி வைக்க கோரப்பட்டதின்படி அடிப்படையில் புகைப்படம், வீடியோ ஆகியன எடுத்த வகையில் பிரேரனை தயார் செய்து அனுப்பியதற்கு பட்டியல் தொகை ரூ.2830/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 23 மன்றம் அனுமதி வழங்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 141 | பொருள் எண்:-24 | பொருள் எண் 24-ல் வரிசை எண் |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | நகர்மன்ற தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்<br>(1) காயல்பட்டணம் நகராட்சி பகுதிக்குட்பட்ட தெரு விளக்குகளை பராமரிக்கும் பொருட்டு புதிய மின்கம்பம் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூ.2 கட்டணத்தை உயர்த்தவும்<br>(2) நகராட்சி பணியாளர்களின் அலுவலக வருகையை பதிவு செய்ய பயோமெட்ரிக் முறையில் விரல் மூலம் வருகையினை பதிவு செய்யவும்<br>(3)வெளிப்படையான நகர்மன்ற நிர்வாகத்தில் கூட்ட நடப்புகளை வீடியோ பதிவு செய்து அந்த குறுத்தகடுகளை உள்ளுர் தொலைக் காட்சிகளுக்கும், இணையதளங்களுக்கும், இதர ஊடகங்களுக்கும், தர அனுமதி வழங்கவும்.<br>(4) ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமை அன்று மாலை 3 மணி முதல் 5 மணி வரை மக்கள் குறை அறியும் கூட்டத்தினை அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நடத்தவும் கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் திருமதி.ஐ.ஆபிதா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு<br>வரிசை எண்:- (1) மற்றும் (2) மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். வரிசை எண்:-(3)-க்கு ஏற்படும் விடியோ மற்றும் குறுத்தகடு தயார் செய்வதற்கு ஏற்படும் செலவினங்கள் தணிக்கை தடைக்கு உட்படுத்தப்படும் என்பதனை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்து முடிவு செய்யலாம். வரிசை எண்:-(4) மன்றம் அனுமதிக்கலாம். | (1)-ல் மின்கம்பம் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூ.2/-கட்டணத்தை உயர்த்த அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண் (2) ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண் (3) நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.<br>வரிசை எண் (4) ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. |
| | 142 | பொருள் எண்:-25<br>காயல்பட்டணம் நகராட்சி 8-வது உறுப்பினர் திருமதி.MMT.பாத்திமா அவர்களின் கோரிக்கைகள்.<br>(1) காயல்பட்டணம் நகராட்சி 8-வது வார்டு பகுதியில் உள்ள நீர்தேக்க தொட்டிகளை தேங்காய் பண்டகசாலை தெரு தொட்டி மற்றும் ரெட் ஸ்டார் வளாகத்தில் உள்ள 2 இலட்சம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு மேலே உள்ள மேல் சுவர்கள் இல்லாமலும் பழுதுபட்டும் இவ்விரு தொட்டிகளின் மேல் மூடிகள் இல்லாமல் திறந்தே கிடக்கிறது பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொது மக்களுக்கும் வழங்க ஏதுவாக உடனே மேல்மூடிகளை பொதுநிதியிலிருந்து இக்கூட்டப் பொருளில் மதிப்பீட்டுடன் சேர்த்து மிக விரைவான செய்தல்.<br>(2) காயல்பட்டணம் நகராட்சி 8-வது வார்டு பகுதியில் தெரு விளக்கு மின் தொடர்கம்பி இல்லாத தெருவிளக்கு இல்லாத மின் கம்பங்களான **SSV SE** 3,4,5,6 மற்றும் **SSV** கொச்சியார் தெரு மின்கம்பம் 290, 291 இடைப்பட்ட மின்கம்பம் SSV 14 இத்தனை மின்கம்பங்களுக்கு 40W | பொருள் எண் 25-ல் வரிசை எண் 4-ல் இனமாக நகராட்சி அலுவலக கட்டிடம் பகுதி 2(Part II Scheme) திட்டத்தின் கீழ் மானியம் பெற்று செய்வதற்கு மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.<br>வரிசை எண் (1)-ல் உடனடியாக நீர்தேக்க தொட்டிக்கு மேல் மூடி வழங்க தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண் (2) ல் உள்ள விஷயங்களில் அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டது. வரிசை எண் (3) - |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | குழல் விளக்கு மாற்றுமாறும் இம்மின்கம்பங்களுின் தெரு விக்கு இல்லாததால் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்கு, திருட்டு சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்திட வேண்டி இப்பணிகளை பொது நிதியிலிருந்து செய்திடவும்.<br>(3) காயல்பட்டணம் நகராட்சிக்கு சுற்றுலா மேம்பாட்டு நிதி 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம் இந்நிதியிலிருந்த காயல்பட்டணம் கடற்கரை பூங்காவிற்கு தென்புறம் உயர்கோபுர மின்விளக்குக்கும், கடற்கரை பூங்காவை பயன்படுத்துவோர்கள் பொதுமக்கள் மற்றும் சிறுவருக்காக குடிநீர் மற்றும் கழிப்பறைகள் வசதி ஏற்படுத்தி தறுமாறும் சுற்றுலா மேம்பாட்டு நிதி ஒதுக்கப்படவில்லையெனில் பொது நிதியிலிருந்து செய்தல்.<br>(4) காயல்பட்டணம் நகராட்சி யையக்கட்டிடம் 58 வருடங்கள் பழமையானது. அக்கட்டிட்தின் முன்பகுதயில் உள்ள நகர்மனற தலைவரின் வடபுறம் அறையின் மேல்பகுதி கான்கிரிட் உடைந்ததிலிருந்து தற்போது அந்த அறை பயன்பாடு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் உள்ள பெரும் பகுதியில் மேலே கன்கிரேட் உடைந்து விழும் அபாயம் உள்ளது. இக்கட்டிடத்தின் மையப்பகுதியில்தான் நகர்மன்ற கூட்ட அரங்கு உள்ளது. நகர்மன்ற கூட்டமும் நகர்மன்ற தலைவரின் அறையும் மையப் பகுதியிலேயே உள்ளது இந்நகராட்சிக்கு வரும் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்துகிறார்கள். ஆபத்தான இக்கட்டிடம் எப்போதும் மேலே உள்ள கான்கிரேட் உடைந்து விழும் ஆபத்து உள்ளது ஆகவே இக்கட்டிடத்தை போர்கால அடிப்படையில் தீர்மானம் நிறேவேற்றி இப்பழைய கட்டிடத்தை முதலில் அகற்ற வேண்டும். இவ்விடத்தில் புதிய நகராட்சி அலுவலகம் கட்டிடம் பகுதி 2 திட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் முறையிட்டு புதிய நகராட்சி அலுவலகம் கட்டுதல்.<br>(5) காயல்பட்டணம் நகராட்சி அனைத்து பகுதியில் தெரு விளக்கு தானியங்கி சுவிட்சுகள் பழுதடைந்து தற்போது 20 இடங்களில் உள்ள தெருவிளக்கு தானியங்கி சுவிட்சுகள் செயல்படாமல் தினசரி பணியாட்கள் கொண்டு மாலை மற்றும் காலை வேலைகளில் தெரு விளக்குகள் ஆன் ஆப் செய்யப்படுகிறது. பணியாட்களால் இப்பணி மிகச்சரியான நேரத்தில் ஆன், ஆப் செய்ய இயலவில்லை ஆகையால் தெரு விளக்கு தானியங்கி சுவிட்கள் 50 வாங்க கேட்டுக் கொண்ட 8-வது வார்டு உறுப்பினர் திருமதி.பீவி பாத்திமா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு<br>சாலை பணிகளை தலைவர் உறுப்பினர் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்திடவும், குடிநீர் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து செய்யவும், தெருவிளக்குகளை துரிதமாக அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். | ல் சுற்றுலா மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு நடைமுறைபடுத்த தீர்மானிக்கப்பட்டது |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | | |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

**காயல்பட்டிணம் நகராட்சி மன்றத்தின் 30.12.2011-ம் தேதிய கூட்டத்தின்**
**தீர்மான நகல்**
**முன்னிலை: திருமதி.ஐ.ஆபிதா**

**பொருள் எண்: 3**

efuh£Á ã®thf« kw¦W« FoÚ® tH§¦FJiw murhiz v© 201 ehs¦ 30.10.1998-d¦go xU Kiwik ty¦Ye® (System Analysis) 7 k©ly Ïa¡Feuf¤ÂW¦F VG v© z« Â£l mik¥ghs® (Programmer) 103 efuh£ÁfS¡F 103 v© z« cjé Â£l mik¥gs® (Assistant Programmer) kw¦W« 59 v© z« òs¦ë égu F¿¥ghs® (Data Entry Operator)g âæl§¦fs¦ nj hw¦Wé¡ f¥£lJ.

efuh£Á ã®thf« kw¦W« FoÚ® tH§¦FJiw murhiz v© 57 ehs¦ 30.04.2007-d¦go _d¦wh« ãiy efuh£ÁfS¡F 50 v© z« òs¦ë égu F¿¥ghs® (Data Entry Operator) gâæl§¦fS« efuh£Á ã®tf« kw¦W« Foã® tH§¦FJiw murhiz v© 86 ehs¦ 18.06.2007-d¦go 7 k©ly Ïa¡Feuf¤ÂW¦F 8 v© z« òs¦ë égu F¿¥ghs® (Data Entry Operator) gâæl§¦fS« njhw¦Wé¡f¥g£lJ.

nkw¦f©l gâæl§¦fëy¦ gâak®¤Âa gâahs®fS¡F jäH¦ehL efuh£Á jftY¦ bjhêy¦ E£g gâ éÂfs¦ 2010 vd éÂKiw tF¤J brd¦id efuh£Á ã®thf Miza® mt®fëd¦ foj v© 5163/2003/IT-1 ehs¦ 24.10.2010-d¦go muÁd¦ mDkÂ nfhçajw¦F muR foj v© 16288/ME-1 2008-14 ehs¦ 15.11.2011-y¦ efuh£Áfëy¦ kd¦w mDkÂ bgw¦W mD¥Ã it¡f Î« kw¦W« Ïy¦yhj g£r¤Ây¦ nj itahd el to¡ if vL¡f Î« bjçé¤Js¦sjhf bjçé¤J nkw¦go gâæl§¦fS¡F njitahd kd¦w mDkÂ bgw¦W mD¥Ã it¡f m¿ÎW¤Â tu¥bgw¦w brd¦id efuh£Á ã®thf Miza® mt®fëd¦ foj« v© 5163/2003/IT-I ehs¦ 22.11.2011-l kd¦w¤Âd¦ gh®it¡F« gÂéw¦F« it¡f¥gL»wJ.

mYtyf F¿¥ò:

mDkÂ¡fyh«.

**தீர்மானம் எண்:-120**

பொருள் எண் 3-க்கு அனுமதி வழங்கப்பட்டது

(x¥g«) திருமதி.ஐ.ஆபிதா
jiyt®
fhašg£b z« efuh£Á

/c© ikefš/

ஆணையாளர்(பொ)
fhašg£b z« efuh£Á